# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 5781-E-2024**

திரு அமுல்ராஜ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
நிருவாக அலுவலர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம் சேப்பாக்கம்,
சென்னை - 600 005

******

**ஆணை**

1) இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு அமுல்ராஜ் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் நிருவாக அலுவலர் திரு க.பரணிதரன் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 20.12.2023 |
| **கோரிய தகவல்**:- <br> மனுதாரர் 10.10.2023 நாளிட்ட மனு ஒன்றை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்கக அலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பியதாக தெரிவித்து, அம்மனு குறித்து 5 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்படவில்லை |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 07.02.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 26.04.2024 |

3) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை, சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு தகவல் வழங்கப்படவில்லையெனக் கூறி, சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

4) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு 05.01.2024 மற்றும் 01.07.2026 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களையும் அவற்றுக்கான தபால் துறை இரசீதுகளையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5) வழங்கப்பட்ட ஆவணங்களை ஆணையம் பரிசீலித்தபோது, மனுதாரர் தனது 6(1) மனுவில், இனம் 5-ல், தான் அனுப்பிய 10.10.2023 நாளிட்ட மனு சம்மந்தமாக, மனுதாரர்களுக்கு சொந்தமான இடத்திற்கு நில அளவை மற்றும் பட்டா வழங்க மதுரவாயல் வட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தால் அது சம்மந்தப்பட்ட நகலை வழங்க வேண்டுமென கோரியுள்ளார். நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலர், அதற்கு, “மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகம் மூலம் தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்” என பதில் அளித்துள்ளார். மனுதாரர், இனம் 5-ல் கோரியிள்ள தகவலை மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் முறைப்படி மாற்றம் செய்யாமல், மனுதாரரின் மனுவை அப்படியே மதுரவாயல் வட்டாட்சியர் அலுவகத்திற்கு அனுப்பியுள்ளார் என்பதையும், அதன் பின்னர் மதுரவாயல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மனுதாரருக்கு 02.01.2026 அன்று தான் பதில் அனுப்பியுள்ளார் என்பதையும் இவ்வாணையம் பதிவு செய்து தனது கண்டனத்தை தெரிவிக்கிறது.

6) விசாரணையின் முடிவில் இவ்வாணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் அனுப்பிய மனுவில் 5 இனங்களில் கோரியுள்ள தகவல்களை மீண்டும் ஒரு முறை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை, சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

ii. **மனுதாரர் தனது 6(1) மனுவில் இனம் 5-ல் கோரிய தகவலை, சட்டப்பரிவு 6(3)-ன் கீழ் முறைப்படி பொதுத் தகவல் அலுவலர் / மதுரவாயல் தலைமையிடத்து துணை வட்டாட்சியருக்கு அனுப்பாமல், இரண்டு ஆண்டுகள் கழித்து 02.01.2026 அன்று தாமதமாக மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டதற்கு காரணமான, அப்போதைய பொதுத் தகவல் யார் என்பதை சென்னை, சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககத்தின் கூடுதல்**

**இயக்குநர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் வழக்கு எண் SA 5781-E-2024**

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/
நிருவாக அலுவலர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம் சேப்பாக்கம்,
சென்னை - 600 005

கூடுதல் இயக்குநர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்,
சர்வே இல்லம் சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு அமுல்ராஜ்,
கதவு எண்.14, 2வது தெரு,
மாதா கோவில் நகர், நொளம்பூர்,
மதுரைவாயல் வட்டம்,
சென்னை - 600 095

Copy to: File
CR/PA